**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை**

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 15 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 17 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 14,742,698 தொகை 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி மீளக்கட்டமைக்கப்பட்டமையால் ரூபா 16,778,362 வரை அதிகரித்திருந்ததுடன் அவ்வாறு அதிகரித்த ரூபா 2,035,664 தொகையைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட இரண்டு வேலைகளுக்காக அவ்வாண்டில் கடன்பட்டோர் ஏற்பாடு ஒதுக்கப்படாதிருக்கும் போது மீளாய்வாண்டில் அதற்காகக் கிடைத்த ரூபா 1,297,073 தொகை நானாவித கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட்டமையால் நானாவிதக் கடன்பட்டோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு வேலைக்காக ரூபா 1,039,368 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் கடன்கொடுத்தோர் ஏற்பாடு ரூபா 239,368 தொகை குறைவாக ரூபா 800,000 ஆக ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட ரூபா 770,567 தொகையான கறகஹவல விளையாட்டரங்கு நிர்மாணித்தல் செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 தொங்கல் கணக்குகள்

முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 10,241 தொகையான வரவு மீதியொன்று இனங்காணப்பட்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,533,118 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,077,966 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 255 | 205 | 1 |
| (ii) | வாடகை | 12,514 | 9,252 | 284 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,054 | 624 | 133 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,312 | 13.562 | 1.624 |

**2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வியாபார அனுமதிப்பதிரக் கட்டணம் ரூபா 133,065 ஆக இருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,570,353 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக கிடைக்க வேண்டியிருந்தது.

3. **செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------

3.1 **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

**தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அனுப்பப்படாமை மற்றும் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் சேகரித்தல்**

-------------------------------------------------------------------------------------------------------------------

2009 ஆம் ஆண்டு முதல் 2014 யூலை 04 ஆந் திகதி வரை தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாக சபையினால் சேகரிக்கப்பட்ட ரூபா 598,468 தொகை 2015 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 **செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

--------------------------------------------------------------

(அ) பலநோக்கு நடமாடும் கூடாரம்

------------------------------------------------------

2013 இன் பாதீட்டு முன்மொழிவின் மூலம் அமுல்படுத்தப்பட்ட மாகாணங்களில் வறுமையைக் குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சிலிருந்து பிரதேச சபைக்கு ரூபா 270,000 பெறுமதியான 10 கூடாரங்கள் கிடைத்திருந்தன.

(i) அதில் 07 ஐ தலைவரும், உப தலைவரை உள்ளடக்கிய 07 உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ii) பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்படாதிருந்த இந்த 07 கூடாரங்களினதும் பயன்பாட்டுக்காலம் முடிவடைந்து உள்ளூராட்சி நிறுவனம் அகற்றியதன் பின்னரும் சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 03 கூடாரங்கள் 2015 ஏப்ரல் 07 ஆந் திகதி கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பேது பௌதீக ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அந்த 03 கூடாரங்களும் அழிவடைந்ததன் பின்னர் அவற்றில் எஞ்சியவைகைளை கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உலோக விலையில் வாங்கும் தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாக தலைவர் 2015 யூன் 15 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) தீர்க்கப்படாத முற்பணம்

முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 965,636 தொகையான முற்பணம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) தலைவரை உள்ளடக்கிய ஏழு உறுப்பினர்கள் தாய்லாந்தில் நடைபெற்ற கல்விச் சுற்றுலாவிற்காக பங்குபற்றிய 04 நாட்களுக்காக அமைய மற்றும் இணைந்த படிகளாக ரூபா 657,738 தொகை பெற்றிருந்த போதிலும், வெளிநாட்டு பிரயாணச் சீட்டுக்களின் படி 03 நாட்களுக்காக மாத்திரம் அமையப் படிகள் பெறக்கூடியதாக இருந்தமையால் ரூபா 27,342 கூட்டுத் தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட 2014 யூலை 04 ஆந் திகதிய மேலதிக இலக்கம் 28 இன் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக ஆகக் குறைந்தது 5 கூறுவிலைகள் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 1,051,700 தொகையான சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ளக வீதிகளைத் திருத்தும் நடவடிக்கைகளுக்கான இயந்திரங்களுக்கான கொடுப்பனவுகளுக்காக 03 கூறுவிலைகள் மாத்திரமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வீதி வேலைகளுக்காக அந்த வீதிகளின் அடிப்பகுதிக்காகவும் கற்துண்டகளை இட்டு மேல்பகுதியில் கற்றுாள் போடுவதற்குத் தேவையான

அளவினை விட கூடுதலாக கற்துாள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 51,843 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சுச் செயலாளரின் 2014 யூலை 02 ஆந் திகதிய MPH/HYW/MNG/Cer/14-1 ஆம் இலக்க கடிதத்தின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மகநெகும கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வீதிகளுக்காக மூலப்பொருட்களைப் போக்குவரத்துச் செய்யும் போது மூலப்பொருளின் அடிப்படையில் சேர்க்கப்படுகின்ற 10 சதவீத மேலதிக கிரயம் சேர்க்கப்படாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 02 ஆந் திகதியின் பின்னர் சபையினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்பட்ட 04 வேலைகளுக்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் ரூபா 23,644 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்